நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 09.09.2021

2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09.09.2021-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**20028/2021/**தி**2** நாள்.**08.09.2021** இல் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு **2021–2022** ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது கீழ் குறிப்பிட்டுள்ள அறிவிப்புகள் வெளியிட்டுள்ளார்.அதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் **3096** விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. நடப்பாண்டில் **552** பூங்காக்கள் ரூ.**122** கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். திட்ட விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.அதன்படி, கீழ்கண்ட பூங்காவை மேம்பாடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் முழு அரசு மானியம் பெற திட்ட கருத்துரு அனுப்பும் நடவடிக்கைக்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

| வ.எண். | பூங்காவின் பெயர் | இடத்தின் பரப்பு அளவு | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.3 பெரியார் நகர் பகுதியில் புதிதாக பசுமை பூங்கா அமைத்தல் | 3226.00 சதுர.மீட்டர் | ஒன்று | ரூ.80.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.795/2021/இ1)

தீர்மானம் எண் : 680 அனுமதிக்கப்பட்டது. நாள் 09.09.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 23.09.2021

2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23.09.2021-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்து டன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

பொருள் : 1

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண்.16341/2021/இ3 நாள்.28.08.2021 படி தொலைநோக்கு திட்டம் -2031 மாநகராட்சி மற்றும் நகராட்சி சாலைகள் அமைத்தல் மற்றும் வகைப்படுத்துதல் தொடர்பான கடிதம் நகர் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இந்த கடிதத்தில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் திட்டப்பணிகள், மற்றும் பாதாள சாக்கடை திட்ட பணிகள், மேற்கொள்வதால் சேதமடைந்த சாலைகள் சீரமைக்க மதிப்பீடு தயார் செய்யும் போது சாலையின் அகலம் 4 மீட்டருக்கு குறைவாக உள்ள சாலைகள் சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். ஏற்கனவே,சிமெண்ட் சாலையாக இருந்தால், மட்டும் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். மேலும்,நகராட்சி பகுதியிலுள்ள தார் சாலைகள்,சிமெண்ட் சாலைகள்,பேவர் பிளாக் சாலைகள்,மண் சாலைகள், சிறுபாலங்கள் மற்றும் மழை நீர் வடிகால்கள் நகராட்சி பணியாளர் கொண்டு அளவீடு செய்து உடனடியாக மேம்பாடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக ந.க.எண்.757/2021/இ1 நாள்.02.09.2021 அன்று மூன்று கண்காணிப்பு அலுவலர்கள் தலைமையில் 30 பணியாளர் கொண்ட 12 குழுக்கள் நியமிக்கப்பட்டது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்/திருமதி) | கணக்கெடுக்கும் வார்டு எண். | கண்காணிப்பு அலுவலர்கள் திருவாளர்கள் |
|---|---|---|---|
| 1 | ஆர்.கருப்புசாமி, து. ப. மே.,<br>கே.கங்காதரன், பிட்டர், | வார்டு<br>எண்.1,2,9 பகுதிகள் | எ.வேல்முருகன்<br>வருவாய் ஆய்வாளர் |
| 2 | எம்.கணேசன், வ. உ.,<br>ஆர்.கௌரி,இ. உ., | வார்டு எண்.3,4,5 பகுதிகள் | எ.வேல்முருகன்<br>வருவாய் ஆய்வாளர் |
| 4 | கே.ராஜா, வ. உ.,<br>எ.கோபால், இ. உ., | வார்டு எண்.6,7,8 பகுதிகள் | எ.வேல்முருகன்<br>வருவாய் ஆய்வாளா |
| 6 | ப.சுப்பிரமணி, இ. உ.,<br>எ.கோபால், இ. உ.,<br>செ.கௌதம், கு. தி | வார்டு எண்.11, பகுதிகள்<br>வார்டு எண்.10,12 பகுதிகள | அ. பெரியசாமி,<br>நகரமைப்ப ஆய்வாளர் |
| 7 | கே.சுந்தரம், வ. உ.,<br>ப.சுப்பிரமணி, இ. உ., | வார்டு எண்.13,14,15 பகுதிகள் | அ. பெரியசாமி,<br>நகரமைப்ப ஆய்வாளர் |
| 8 | அ.முருகேசன், க. உ.,<br>செ.கௌதம், கு. தி | வார்டு எண்.16,20,21 பகுதிகள் | அ. பெரியசாமி,<br>நகரமைப்ப ஆய்வாளர் |
| 9 | ஆர்.ரவி, வ. உ.,<br>ஆர்.கமலவாணி,இ. உ.,<br>ஆர்.ராஜ்குமார், சங்கிலியாளர், | வார்டு எண்.17,18,19 பகுதிகள் | ஜி.சாகுல் ஷமீது,<br>பொதுப்பணி<br>மேற்பார்வையாளர் |
| 11 | தே.முருகேசன், த. உ.,<br>சசிக்குமார், பரப்புரையாளர் | வார்டு எண்.22,25,27 பகுதிகள் | ஜி.சாகுல் ஷமீது,<br>பொதுப்பணி<br>மேற்பார்வையாளர் |
| 12 | ஆர்.குமார், து. ப. மே.,<br>எஸ்.கார்த்திக், வ. உ.,<br>வி. எம்.ராபின் ராஜாஜி, இ.உ., | வார்டு எண்.23,24,26 பகுதிகள் | ஜி.சாகுல் ஷமீது,<br>பொதுப்பணி<br>மேற்பார்வையாளர் |

இக்குழு நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வார்டு பகுதிகளில் அளவீடு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டு 22.9.2021 அளவீடு செய்யும் பணி முடிக்கப்பட்டு சான்று பெறப்பட்டுள்ளது. இந்த அளவீடுகள் தொகுப்பு செய்யப்பட்டு கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்டவாறு சாலைகள் மற்றும் சிறுபாலங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களின் அறிவுரையின்படி தார் சாலை,மண் சாலை,பேவர் பிளாக் சாலை,சிமெண்ட் சாலை ஆகியவைகளாக பிரிக்கப்பட்டது.

மேலும் சத்தியமங்கலம் நகர் பகுதியில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படுத்தப்பட்ட சாலைகள், அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையில் அரசாணை எண்.172 & 78-ன் படி நகர் ஊர்ரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் பெறப்பட்டு சத்தியமங்கலம் நகராட்சி ஆணையர் வரைமுறைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் நகர் அமைப்பு ஆய்வாளர் குறிப்பின் படியும் கீழ்கண்ட விபரங்கள் நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| அளவீடு செய்யப்பட்டுள்ள சாலைகள் (மீட்டரில் ) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண். | வார்டு எண். | தார் சாலை | சிமெண்ட் சாலை | பேவர் பிளாக் | மண் சாலை | மொத்தம் | சிறுபாலம் எண்ணிக்கை |
| 1 | 1 | 1742.50 | 1016.60 | --- | 4540 | 7299.1 | 14 |
| 2 | 2 | 9595.00 | --- | | 310 | 9905 | 4 |
| 3 | 3 | 15544.00 | | 934 | 1522 | 18000 | 32 |
| 4 | 4 | 601.50 | 369.60 | | | 971.1 | 8 |
| 5 | 5 | 1186.00 | 543.30 | | | 1729.3 | 21 |
| 6 | 6 | 446.30 | 466.90 | | | 913.2 | 12 |
| 7 | 7 | 120.00 | 814.30 | | | 934.3 | 9 |
| 8 | 8 | 377.50 | 486.40 | | | 863.9 | 8 |
| 9 | 9 | 17378.00 | 1323.10 | 1273.10 | 497 | 20471.2 | 38 |
| 10 | 10 | 12555.00 | 766.80 | ---- | 106 | 13427.8 | 12 |
| 11 | 11 | 5818.8 | 486.80 | | 535 | 6840.6 | 8 |
| 12 | 12 | 1038.00 | 1064.00 | | | 2102 | 9 |
| 13 | 13 | 795.00 | ---- | | | 795 | 2 |
| 14 | 14 | 561.60 | ---- | | | 561.6 | 3 |
| 15 | 15 | 820.5 | 1548.80 | | | 2369.3 | 2 |
| 16 | 16 | 1110.9 | 84.4 | | | 1195.3 | 11 |
| 17 | 17 | 635.6 | 110.6 | | | 746.2 | 3 |
| 18 | 18 | 1059.8 | 681.6 | | | 1741.4 | 11 |
| 19 | 19 | 650 | 569.3 | | | 1219.3 | 5 |
| 20 | 20 | 542.5 | 609 | | | 1151.5 | 8 |
| 21 | 21 | 896 | 523.4 | | | 1419.4 | 7 |
| 22 | 22 | 882 | 830 | | | 1712 | 12 |
| 23 | 23 | 2718.8 | 338.1 | | | 3056.9 | 20 |
| 24 | 24 | 1131.9 | 2544.5 | | 25 | 3701.4 | 6 |
| 25 | 25 | 6064 | 383 | | 839 | 7286 | 23 |
| 26 | 26 | 2324 | 796.44 | | 151.9 | 3272.34 | 3 |
| 27 | 27 | 1396.5 | 1072 | | 633.5 | 3102 | 11 |
| மொத்தம் | | 87991.70 | 17428.94 | 2207.10 | 9159.40 | 116787.14 | 302 |

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.757/2021/இ1)

தீர்மானம் எண் : 681 அனுமதிக்கப்பட்டது. நாள் 23.09.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 27.09.2021

2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2021-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 682 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2021-ம் மாத மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 683 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

**பொருள் : 3**

இந்நகராட்சிக்கு சொந்தமான உரிம இனங்கள் மற்றும் கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர விளம்பரம் செய்யவும் மற்றும் 2021-2022 முதல் 2023-2024 வரை பொது ஏல நிபந்தனைகள் அடங்கிய புத்தகங்கள் அச்சடிக்கவும் மேலும் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக்கட்டணம் வசூல் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் நுழைவுக்கட்டணக் கழிப்பிடம் வசூல் 01.07.2020 முதல் நிர்வாக வசூல் மூலமாக செய்யப்பட்டு வருகிறது. இதற்கான இரசீதுகளை அச்சடிக்க இந்நகர் மன்ற தீர்மான எண். 592 நாள்.20.05.2021 ன்படி ரூ.2,00,000/- லட்சம் ( ரூபாய்இரண்டு இலட்சம் மட்டும்) செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது வரை நிர்வாக மூலமாக வசூல் செய்யப்பட்டு வருவதால் கூடுதலாக இரசீதுகள் அச்சடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் 2021-2022 ம் ஆண்டிற்கு குத்தகை இனங்கள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட வேண்டியுள்ளதாலும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. அவசர அவசியம் கருதி உடனடியாக இரசீதுகள் அச்சடிக்கப்பட வேண்டியுள்ளதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட THE ERODE DISTRICT PRINTERS INDL CO-OPERATIVE SOCIETY மூலமாக அச்சிடவும் இதற்கான தொகையை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

1.செலவினத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2.2021-2022-ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் செலவினத்தில் சேர்த்து கொள்ளலாம்.

3. அரசு அங்கீகாரம் பெற்ற INDL CO-OP Society மூலமாக பிரிண்டட செய்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந. க. எண். 1200/2020/அ3)

தீர்மானம் எண் : 684 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதியபேருந்து நிலைய கடை எண்.01-ஐ திருமதி வி முத்துலட்சுமி என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2022 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.14,680/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என 15.09.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை15.09.2021முதல் ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்காணும் புதியபேருந்து நிலைய கடை எண எண்.01-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார்.இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 17.09.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் புதியபேருந்து நிலைய கடை எண்.01-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக 15.09.2021 முதல் வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1200/20/அ3)

தீர்மானம் எண் : 685 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் தலைமை நீரற்று நிலையத்தில் உள்ள (Clear water pump) 25 H.P திறந்த வெளி நீர் மூழ்கி மின் மோட்டார் பழுதடைந்துள்ளது. நீர் மூழ்கி மின் மோட்டார் வாங்கி 6 வருடங்களுக்க மேலாகி விட்டபடியால் பழுது நீக்கம் செய்து பயன்படுத்த முடியாது. எனவே மேற்கண்ட 25 H.P திறந்த வெளி கிணறு, கிணற்று நீர்மூழ்கி மின் மோட்டார் புதியதாக வாங்கவும் அதற்கான செலவினம் ரூ.1,31,400/- ஆகும். குடிநீர் விநியோக அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி சட்டம் 1920 15-ன் கீழ் Deccan pump Pvt Ltd., கோவை நிறுவனத்தில் இருந்து விலைப்புள்ளி பெற்று நேரடியாக பணி உத்திவு வழங்கி மின் மோட்டடார் கொள்முதல் செய்து தொகை ரூ.1,31,400/- வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந. க. எண். 849/2021/இ1)

தீர்மானம் எண் : 686 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 2018-2019,2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டில் நகராட்சியின் வருவாய்,குடிநீர்,கல்வி நிதியில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது.மேற்கண்ட பணிகள் நிர்வாக நலன் கருதி இரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ள நகர் மன்றத்தின்ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | பணிஆணை வழங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|
| | **2018-2019** | | | |
| 1 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட சௌடம்மன் கோவில் வீதி எண்.1 மற்றும் 2 இல் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் (குடிநீர் நிதி) | ரூ.2.00 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | 03.12.2018 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட சத்தி-1 நடுநிலைப்பள்ளியில் மேல் தளம் மற்றும் தரை தளம் அமைத்தல் **(கல்வி நிதி** | ரூ.9.00 | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | 04.02.2019 |
| | **2019-2020** | | | |
| 3 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட காசிக்காடு காலணி பகுதியில் மழை நீர் வடிகால் கட்டுதல். **(வருவாய் நிதி** | ரூ.3.00 | Thiru.Dharmaraj Contractor Sathyamangalam | 01.07.2019 |
| 4 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கொளத்துார் துவக்கப்பள்ளியில் வர்ணம் பூசதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொளுதல். **(கல்வி நிதி** | ரூ.5.00 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | 01.09.2019 |
| 5 | சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் ரங்கசமுத்திரம் உயர்நிலைப்பள்ளி இரண்டு வகுப்பறைகள் கட்டுதல். **(கல்வி நிதி)** | ரூ.10.00 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | 04.11.2019 |
| | **2020-2021** | | | |
| 6 | வார்டு எண்.13 பெரியகுளம் மெயின் திப்புசுல்தான் ரோடு சந்திப்பு மற்றும் போயர் வீதியில் தடுப்பு சுவர் கட்டுதல் **(வருவாய் நிதி)** | ரூ.10.00 | M/s.VBN Builderrs Contractor Tiruppur | 01.01.2021 |
| 7 | வார்டு எண்.23 பாரதி நகர் பகுதியில் யோகா மையம் அமைத்தல் **(வருவாய் நிதி)** | ரூ.9.00 | M/s.Vino Constructions Contractor | 03.02.2021 |
| 8 | நகராட்சி அலுவலகத்திற்கு முன்பு பேவர் சாலை அமைத்தல் **(வருவாய் நிதி)** | ரூ.7.20 | M/s.VBN Builderrs Contractor Tiruppur | 03.02.2021 |
| 9 | சத்தியா தியேட்டர் மெயின் ரோட்டில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் **(குடிநீர் நிதி)** | ரூ.2.50 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | 03.02.2021 |
| | மொத்தம் | ரூ.57.70 | | |

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)பொருளில் கண்ட வ.எண்.1 முதல் 9 வரை உள்ள அனைத்து பணிகள் இரத்து செய்யப்படுகிறது.இப்பணிகளுக்கு செலுத்திய வைப்பு தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்தாரர் அவர்களுக்கு திருப்பி வழங்கலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 687 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

## பொருள் : 7

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.25 கூத்துனுார் சாலையில் பொதுக்கழிப்பிடத்தில் உள்ள கதவுகள்,பேசின்கள்,டைல்ஸ்கள்.,தரைதளம்,தண்ணீர் பைப்புகள் ஆகியன பழுதாகி உள்ளது.மேற்கண்ட கழிப்பிடம் பழுதுகள் குறித்து உங்கள் தொகுதி முதலமைச்சர் தனிபிரிவில் குறை தீர்க்கும் மனு எண்.1426058 நாள்.26.7.2021 மனுதாரர் புகார் மனு அளித்துள்ளார்கள். எனவே,மேற்கண்ட கழிப்பிட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு **ரூ.2.50 இலட்சத்தில்** தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டிருக்கான அனுமதியும்,ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை தொடரவும் நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து கொள்ளலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 688 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதியபேருந்து நிலைய கடை எண்.56-ஐ திரு கேரோஜேந்திரன் என்பவருக்கு 01.10.2019 முதல் 30.09.2022 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.10,950/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என 08.09.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். கடைவாடகை செலுத்தாதால் ஏற்கனவே நகராட்சியால் கடை பூட்டப்பட்டுள்ளது. எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை01.09.2021முதல் ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்காணும் புதியபேருந்து நிலைய கடை எண எண்.56-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார்.இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 01.09.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் புதியபேருந்து நிலைய கடை எண்.56-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக 01.09.2021 முதல் வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் : 689 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்கள் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் கட்டணம் கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமம், பேருந்து நிலையத்தில் ஒளி, ஒலி விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம், பழைய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -8, கச்சேரிவீதி, சத்திரக் கடை எண்ணிக்கை - 25, புதிய பேருந்து நிலைய கடை எண்ணிக்கை -5 ஆகியவை நகர்மன்ற தீர்மான எண். 893, 948, 949,255 மற்றும் முன் அனுமதி தீர்மானங்களின் படி மேற்கண்ட எண்ணிக்கை கொண்ட கடை இனங்களை 03.09.2021-ஆம் தேதி பொது ஏலம் விடப்பட்டதில கீழ்க்கட்ணடவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. கீழ்கண்ட இனங்கள் அரசாணை எண்.92-ன் படி, சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு மற்றும் குழு நிர்ணயித்த மன்ற அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் இதனை உறுதி செய்வது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | ஏலதாரரின் பெயர் | ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்ற மாத வாடகை ரூ. | உரிமக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலைய வணிக வளாகம் | 13 | ஆர்.தனபால் | 10,300/- | 16.09.2021 முதல் 30.09.2024 வரை |
| 2 | பழைய பேருந்து நிலைய வணிக வளாகம் | 22 | பி.வி.அஜய் புவனேஷ் | 5,000/- | 16.09.2021 முதல் 30.09.2024 வரை |

**அலுவலகக்குறிப்பு :-**

1) மேற்காணும் இரண்டு கடைகள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இதில் மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 2 வரை உள்ள கடை இனங்கள் அரசாணை எண். 92-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் உயர்ந்தபட்ச மாத வாடகை காட்டிலும் கூடுதலாகவும் சந்தை மதிப்பு மற்றும் சர்கார் மதிப்பு காட்டிலும் கூடுதலாகவும் மாத வாடகை சென்றுள்ளதால் மேற்கண்ட ஏலதாரரின் உயர்ந்தபட்ச மாத வாடகையினை அரசாணை எண். 92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளின் படி உறுதி செய்து மன்றம் அனுமதிக்கலாம்.

II) 15.09.2021-ஆம் தேதி முதல் கடைகள் உரிமம் உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு மேற்காணும் 2 கடைகளையும் ஒப்படைக்க அனுமதி வழங்கியமைக்கும் மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண்.1200/2020/அ3)

தீர்மானம் எண் : 690 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சியின் 2019-20 ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி குடிநீர் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகள் மற்றும் குறிப்புகளை உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை ஈரோடு அவர்களது கடிதம் ந.க.எண்.602/த1/2020 நாள்.02.08.2021-ன் மூலமாக இந்நகராட்சிக்கு பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிதிகளின் மீதான தணிக்கை அறிக்கைகளை நகர் மன்றத்தின் மேலான பார்வைக்கும் பதிவிற்ககும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.**

(ந. க. எண். 5235/2012)

தீர்மானம் எண் : 691 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடை எண்.22-ஐ திரு.சி.கார்த்திக் என்பவருக்கு 01.09.2020 முதல் 31.08.2024 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.13,358/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை தொடர்ந்து நடத்த முடிய வில்லை என 01.09.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

மேற்க்கண்ட புதிய பேருந்து நிலைய கடை எண்.22-ன் உரிமதாரர் தற்போது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் கடையை தொடர்ந்து கடையை நடத்த முடிய வில்லை என மனு வழங்கியுள்ளார்.இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 01.09.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண்.22-ன் உரிமம் காலம் முடிவடையாத நிலையில் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகை பறிமுதல் செய்தும் புதிய இனமாக வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 759/2021/அ3)

தீர்மானம் எண் : 692 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண்.21-ஐ திரு.செ.சோமசுந்தரம் த/பெ செல்வராஜ் என்பவருக்கு 01.11.2018 முதல் 31.10.2021 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.5,000/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை நீட்டிப்பு செய்ய விருப்பமில்லை என 03.09.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து 01.11.2021 முதல் புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண்.21-ன் உரிமதாரர் கொரனா நோய் தடுப்பு காரணத்தால் கடை பூட்டிய நிலையில் உள்ளதாலும் கடையை 01.11.2021 முதல் நீட்டிப்பு செய்ய விருப்பமில்லை என 03.09.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் அளித்துள்ளார்.இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 03.09.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் பழைய பேருந்து நிலைய கடை எண்.21-ன் உரிமம் காலம் முடிவடைவதால் மேற்க்கண்ட கடையினை ஒப்படைப்பு செய்வதால் உரிம இனத்தை ரத்து செய்து, மேலும் டெபாசிட் தொகையை நிலுவை வாடகைக்கு சரிக்கட்டி மீதமுள்ள தொகையை உரிமதாரருக்கு வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து 01.11.2021 முதல் புதிய இனமாக ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் : 693 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண்.14 திரு.மு.அப்துல் ஜப்பார் த/பெ முகம்மது இப்ராஹீம் என்பவருக்கு 01.09.2018 முதல் 31.10.2021 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.14,700/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர், உரிமம் காலம் முடிவடைவதால் தொடர்ந்து நடத்த விருப்பம்மில்லை என 05.10.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண்.14-ன் உரிமதாரர் உரிமம் காலம் முடிவடைவதால் தொடர்ந்து நடத்த விருப்பம்மில்லை மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 06.10.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் 01.11.2021 முதல் புதிய இனமாக வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1147/2021/எ3)

தீர்மானம் எண் : 694 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண்.23 திருமதி.கே.அமுதா என்பவருக்கு 01.09.2018 முதல் 31.10.2021 வரை உண்டான காலத்திற்க்கு மாத வாடகை ரூ.4,500/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது கடை உரிமதாரர், உரிமம் காலம் முடிவடைவதால் தொடர்ந்து நடத்த விருப்பம்மில்லை என 01.10.2021-ஆம் தேதியில் விண்ணப்பம் செய்துள்ளார். எனவே இவரின் மேற்கண்ட உரிம இனத்தை ரத்து செய்து புதிய இனமாக அரசானை எண்.92 மற்றும் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மேற்க்கண்ட பழைய பேருந்து நிலைய கடை எண்.23-ன் உரிமதாரர் உரிமம் காலம் முடிவடைவதால் தொடர்ந்து நடத்த விருப்பம்மில்லை மனு வழங்கியுள்ளார். இதன் மீது வருவாய் ஆய்வாளர் அவர்களின் 05.10.2021-ஆம் தேதி குறிப்பு வழங்கபட்டதின் பேரில் 01.11.2021 முதல் புதிய இனமாக வழங்க பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்கண்ட கடையின் உரிமம் இரத்து செய்து ஒப்படைக்கும் தேதி முதல் மூன்றாண்டு காலத்திற்க்கு அரசாணை எண்-92 மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

அவசர அவசியம் கருதி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1047/2021/அ3)

தீர்மானம் எண் : 695 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்றின் வடபுற பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விரைவில் செயல்படவுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரினை விவசாயம் மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்திக் கொள்ள முன்னுரிமை அடிப்படையில் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வந்து 30.09.2021க்குள் பதிவு செய்து கொள்ளுமாறு தினகரன் தினசரி நாளேட்டில் விளம்பரம் செய்யப்பட்டது.இதற்கான செலவின தொகை ரூ.5140.80/- ஐ KAL Publications (P) Ltd நிறுவனத்திற்கு வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.4444/2011/இ1)

அலுவலக குறிப்பு:

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு வரவு-செலவு நிதி திட்டத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

(ந.க.எண்.1111/2000/இ1)

தீர்மானம் எண் : 696 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 16

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந. க. எண். 21326/2021/இ3 நாள். 09.09.2021-ல் கோரியுள்ளபடி, சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11 தினசரி மார்கெட் மேம்படுத்துதல் பணிக்காக ரூ.400.00 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு கீழ்க்கண்ட பிரேரணை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பணியின் விபரம்:–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்கெட் வளாகத்தில் புதியதாக 243 கடைகள் கட்டுதல் மழைநீர் வடிகால், தெருவிளக்கு, கழிப்பிடம் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் பணி | ரூ.400.00 |

| | |
|---|---|
| மொத்தம் | ரூ.400.00 |

அலுவலகக் குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.796/2021 இ1)

தீர்மானம் எண் : 697 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 17

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1 நாள்.09.09.2021ல் கோரியுள்ளபடி சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக 323 தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்காக ரூ.50.00 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டு கீழ்க்கண்ட பிரேரணை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பணியின் விபரம்:–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக 323 தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணி | ரூ.50.00 |
| மொத்தம் | | ரூ.50.00 |

அலுவலகக் குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.850/2021 இ1)

தீர்மானம் எண் : 698 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 18

உதவி இயக்குநர் உள்ளாட்சி கணக்கு புதிய ஆண்டிற்கு தேவையான இரண்டு Cub board 6’1/2 x 3’1/2 (with double cocler) 20 kg CR Sheet மற்றும் 36’x15x172” (6 தட்டு) steel reck (with 20 kg CR Sheet) நான்கு எண்ணிக்கை புளியம்பட்டி சர்வோதயா சங்கத்தில் இருந்து நேரிடையாக வாங்கவும், இதற்கு உத்தேச செலவினம் ரூ.75,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வருவாய் நிதியின் கீழ் சர்வோதய சங்கத்திற்கு பணி உத்திரவு வழங்கிய செலவினம் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.768/2021/இ1)

தீர்மானம் எண் : 699 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு - டி, பிளாக் - 9, ந.அ.எண்.88, ரீ.சர்வே எண். 334/3 இல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குழந்தைகள் காப்பக இடத்தினை திருமதி. எம். ஜெயலட்சுமி, க/பெ. பாபு என்பவர் மெங்களூர் ஓட்டி குடியிருப்பு கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதினை அகற்றுவது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வழக்க எண். W.P.No.18157/2021 இன்படி நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்.

சத்தியமங்கலம் நகராட்சியின் சார்பாக உயர்நீதி மன்ற வழக்குளில் வழக்காடுவதற்கு ஏற்கனவே இந்நகராட்சியின் நகர் மன்ற தீர்மான எண். 225 நாள். 13.012017 இன்படி

நியமனம் செய்யப்பட்ட திரு. பி.ஆனந்த, உயர்நீதிமன்ற வழக்குரைஞர் அவர்களிடம் வழக்கினை ஒப்படைக்கவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் எதிர் வழக்காடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வழக்கிற்கு வக்காலத்து, எதிர்வாதுரை உடன் தயார் செய்ய வேண்டியுள்ளதால், தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி வழக்கை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

வழக்கு எண். W.P.No.18157/2021 இன் வழக்கினை வக்காலத்து தாக்கல் செய்யவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர் திரு. பி. அனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந. க. எண்.2530/2017/எப்.1)

தீர்மானம் எண் : 700 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

**பொருள் : 20**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு - டி, பிளாக் - 9, ந.அ.எண்.88, ரீ.சர்வே எண். 334/3 இல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குழந்தைகள் காப்பக இடத்தினை திரு. தேவராஜ், த/பெ. லிங்கப்பகவுடர் என்பவரால் மெங்களூர் ஓட்டி குடியிருப்பு கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதினை அகற்றுவது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்க எண். W.P.No.18158/2021 இன்படி நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்.

சத்தியமங்கலம் நகராட்சியின் சார்பாக உயர்நீதி மன்ற வழக்குளில் வழக்காடுவதற்கு ஏற்கனவே இந்நகராட்சியின் நகர் மன்ற தீர்மான எண். 225 நாள். 13.012017 இன்படி நியமனம் செய்யப்பட்ட திரு.பி.ஆனந்த, உயர்நீதிமன்ற வழக்குரைஞர் அவர்களிடம் வழக்கினை ஒப்படைக்கவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் எதிர் வழக்காடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வழக்கிற்கு வக்காலத்து, எதிர்வாதுரை உடன் தயார் செய்ய வேண்டியுள்ளதால், தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி வழக்கை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

வழக்கு எண். W.P.No.18158/2021 இன் வழக்கினை வக்காலத்து தாக்கல் செய்யவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர் திரு. பி. அனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந. க. எண்.2528/2017/எப்.1)

தீர்மானம் எண் : 701 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

**பொருள் : 21**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு - டி, பிளாக் - 9, ந.அ.எண்.88, ரீ.சர்வே எண். 334/3 இல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குழந்தைகள் காப்பக இடத்தினை திரு. குழந்தையம்மாள், க/பெ. ஆரோக்கியசாமி என்பவரால் தார்சு குடியிருப்பு கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதினை அகற்றுவது குறித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்க எண். W.P.No. 18161/2021 இன்படி நகராட்சி ஆணையாளர் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்.

சத்தியமங்கலம் நகராட்சியின் சார்பாக உயர்நீதி மன்ற வழக்குளில் வழக்காடுவதற்கு ஏற்கனவே இந்நகராட்சியின் நகர் மன்ற தீர்மான எண். 225 நாள். 13.012017 இன்படி நியமனம் செய்யப்பட்ட திரு.பி.ஆனந்த, உயர்நீதிமன்ற வழக்குரைஞர் அவர்களிடம் வழக்கினை ஒப்படைக்கவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் எதிர் வழக்காடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வழக்கிற்கு வக்காலத்து, எதிர்வாதுரை உடன் தயார் செய்ய வேண்டியுள்ளதால், தனி அலுவலரின் முன் ஒப்புதல் பெற்று மேற்படி வழக்கை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. ஆனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

வழக்கு எண். W.P.No. 18161/2021 இன் வழக்கினை வக்காலத்து தாக்கல் செய்யவும், எதிர்வாதுரை தாக்கல் செய்யவும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர் திரு. பி. அனந்த் அவர்கள் வசம் ஒப்படைத்தமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந. க. எண்.2527/2017/எப்.1)

தீர்மானம் எண் : 702 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரம் தயாரித்து விவசாயிகளுக்கு ஒரு கிலோ ரூ.30/- பைசா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு உரம் தயாரித்து விவசாயிகளுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்கு மத்திய அரசாங்கம் Market Development Assistance மானியம் வழங்கிறது. அதற்கான IFMS வெப்சைட்டில் உரம் தயாரிப்பு மற்றும் விற்பனை விவரம் தினமும் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. விற்பனை செய்த விவரத்தினை மாதம்தோறும் IFMS வெப்சைட்டில் ஜெனரேட் செய்து அதில் ஆணையாளர் சத்தியமங்கலம் நகராட்சி மற்றும் பட்டய கணக்காளயர் (Charterred Accountant) அவர்களின் கையொப்பம் பெற்று நான்கு மாதங்களுக்கு பட்டய கணக்காயர் KALICHAMY M & ASSOCIATES Chartered Accountants, 10 Town Extension 3rd Street near sheriff colony vinayagar temple, Tirppur - 641 604 என்பவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டுள்ளது. பட்டய கணக்காளர் KALICHAMY M & ASSOCIATES Tiruppur - 641 604 அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.8,000/- க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்

( ந. க. எண்.1260/2020/எச்.1)

தீர்மானம் எண் : 703 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 23

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்களுக்கும் பொறியியல் பிரிவில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியுள்ள பணியாளர்களுக்கும் 2021-2022 ஆம் ஆண்டு வருடாந்திர சீருடைத்துணிகள் மற்றும் காலணிகள் வாங்கவும், மற்றும் அப்பணியாளர்களுக்கு தையற்கூலி வழங்கவும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மேற்கண்ட சீருடையை தழிழ்நாடு அரசு நிறுவனமான கோ-ஆப் டெக்ஸ் நிறுவனத்திலும் காலணியை காதி கிராப்ட் நிறுவனத்திலும் கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1.மன்றம் அங்கீகரிக்கலாம்.

2.இச்செலவினத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண் : 704 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

பொருள் : 24

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 இன் படி சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி ஒப்படைப்பு செய்து 50 தூய்மை பணியாளர்கள் வெளிமுகமை முறையில் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற அடிப்படையில் 01.04.2021 முதல் 30.09.2021 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்படவேண்டியுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழைக்காலம் துவங்குவதை முன்னிட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20980/2021/எச்-2 நாள்.16.9.2021 இன் படி நகராட்சிப்பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள், பெரிய வடிகால்கள் தூர்வாரும் பணி சிறப்பு முகாம் அட்டவணைப்படி நடைபெற்று வருகிறது.

மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.9807/2020/பே.மே நாள்.20.9.2021 கூட்ட நடவடிக்கை குறிப்பின் படி நகராட்சிப்பகுதிகளில் கொரோனா தடுப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பொது சுகாதாரம் பேணப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்ள 50 தூய்மைப்பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.10.2021 முதல் 31.10.2021 வரையிலான ஒரு மாதம் காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத காலம் மட்டும் (01.10.2021 முதல் 31.10.2021 வரை) ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் , அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7,75,000/- க்கும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 705 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

**பொருள் : 25**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 11,12,23 முதல் வார்டுகள் 27 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 தூய்மை பணியாளாகள் மூலம் தூய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில் 01.04.2021 முதல் 30.09.2021 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்படவேண்டியுள்ளது.

தற்போது வடகிழக்கு பருவமழைக்காலம் துவங்குவதை முன்னிட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.20980/2021/எச்-2 நாள்.16.9.2021 இன் படி நகராட்சிப்பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்கள், பெரிய வடிகால்கள் தூர்வாரும் பணி சிறப்பு முகாம் அட்டவணைப்படி நடைபெற்று வருகிறது.

மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.9807/2020/பே.மே நாள்.20.9.2021 கூட்ட நடவடிக்கை குறிப்பின் படி நகராட்சிப்பகுதிகளில் கொரோனா தடுப்பு மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பொது சுகாதாரம் பேணப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்ள 55 தூய்மைப்பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.10.2021 முதல் 31.10.2021 வரை ஒரு மாதம் காலம் தற்காலிக அடிப்படையில் பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத காலம் மட்டும் (01.10.2021 முதல்

31.10.2021 வரை) ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.8,50,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 706 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.09.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.